❖ EIA Report-ல் உள்ள இணைப்புகளில் எத்தனை இணைப்புகள் உள்ளது. அதில் "அ" பதிவேடு நகல் இடம் பெற்றுள்ளதா? ஒரு கிராம கணக்கில் "அ" பதிவு இடம் பெற்றிருக்கும் அது இந்த நிலத்திற்கு அருகில் எந்தெந்த நிலங்கள் உள்ளது என்பதை குறிக்கும் தகவல்கள் இதில் ஏன் இடம் பெறவில்லை. ஒரு "அ" பதிவேட்டில் தான் அந்த நிலத்திற்கு அருகில் குளம், குட்டை, ஏரி மற்றும் பாதைகள் உள்ளதா என்பது பற்றி தெரியும் ஆனால் அந்த பதிவினை போடாமல் மறைத்துவிட்டீர்கள்.

❖ தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிலிருந்து இங்கு எந்தவிதமான ஆய்விற்கும் வருவது இல்லை. அவர்கள் Google மற்றும் இவர்கள் கொடுக்கும் அறிக்கையினை கொண்டு சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆகையால் இக்கூட்டத்தில் போடப்பட்ட விளக்க படத்தில் "அ" பதிவேட்டை பற்றி போடாமல் மறைத்துள்ளீர்கள். ஆகவே, EIA Report-ஐ முறையாக தயார் செய்து முறையாக பொது மக்களிடம் சமர்ப்பிக்கவில்லை.

❖ ஆதலால் இப்பொது மக்கள் கருத்துக் கேட்புக்கூட்டம் ஏற்புடையது அல்ல ஆகையால் இப்பொது மக்கள் கருத்துக் கேட்புக்கூட்டத்தை ரத்து செய்து மீண்டும் முறையான ஆவணங்களை சமர்ப்பித்த பின்னரே இக்கூட்டத்தை நடத்த வேண்டும்.

❖ EIA Report விளக்க படத்தில் குவாரி அமையவுள்ள இடத்தை சுற்றி 100 மீட்டர் மற்றும் 10 கிலோமீட்டர் சுற்றளவில் என்னென்ன உள்ளது என்பது பற்றி தெரிவித்தீர்கள் ஆனால் அருகில் ஏதேனும் ஒரு காற்றாலை பற்றி ஏன் தெரிவிக்கவில்லை, அங்கு காற்றாலைகள் ஏதுமில்லையா? நீங்கள் அங்கு ஆய்வு செய்து பின் இந்த அறிக்கையினை செய்துள்ளீர்களா? ஆய்வு செய்யாமல் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டதா?

❖ மரியாதைக்குரிய வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு தெரியும் அந்த பகுதி முழுவதும் காற்றாலைகள் அதிகமுள்ள பகுதி, ஆனால் நீங்கள் ஒரு காற்றாலை உள்ளது என்று ஏன் போடவில்லை. அப்போது இவர்கள் இதனை அனைத்தையும் மறைத்து சுற்றுச்சூழல் அனுமதி பெற இவ்வாறு முயற்சி செய்கிறார்கள்.

- இக்குவாரி அமையவுள்ள இடத்தில் ஏற்கனவே சில குவாரிகள் இயங்கி வருகிறது. அங்கும் காற்றாலைகள் உள்ளது. இக்குவாரிகளை சுற்றி காற்றாலைகள் உள்ளது. இதற்கு எப்படி அனுமதி கொடுக்க இயலும்.

- ஒரு காற்றாலையானது 50 மீட்டர் முதல் 80 மீட்டர் வரை இருக்கும். கிட்டத்தட்ட இது போன்று அந்த இடத்தில் 1000 கணக்கான காற்றாலைகள் அங்குள்ளது. இது போன்று ஆவணங்களை மறைத்து சுற்றுச்சூழல் அனுமதி பெற இவ்வாறு முயற்சி செய்கிறார்கள்.

- நாமக்கல் கல்குவாரி உரிமையாளர் சங்கத்தலைவர் ஒருவர் வீடியோ பதிவில் சத்தியம் செய்தியில் ஒரு பேட்டி கொடுக்கிறார், அதில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் ஒரு ஹெக்டேர்க்கு ரூ.1.50 லட்சம் லஞ்சத்தை மட்டுமே கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கப்படுகிறது, என்று கூறியுள்ளார்.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அதிக அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, அதில் அதிகம் கல்குவாரிகளுக்கு மட்டுமே அறிவித்துள்ளது.

- நாம் அனைவருக்கும் வீடு கட்ட மற்றும் பலவகை தேவைகளுக்கு இவ்வளவு கல்குவாரிகள் தேவையா என்று கேட்டால் தேவையில்லை. இவ்வளவு அனுமதியும் தேவையில்லை.

- அருகில் உள்ள மாநிலம் கேரளா. அது கடவுளின் நாடு என்று கூறுகின்றனர். அங்கு ஒரு படி மண் மற்றும் கற்களை கூட எடுக்க முடியாது. இது போன்று ஒரே பகுதியில் 10 குவாரிகள் அமைத்திட முடியாது. அங்கு ஒரு குவாரியை கூட அனுமதிக்கமாட்டார்கள். அங்கு சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அந்த மக்களே மிகுந்த ஆர்வமுடன் உள்ளனர்.

- ஆனால், நாம் இங்குள்ள கல் குவாரிகளிலிருந்து கல் மற்றும் மண்களை எடுத்து செல்ல அனுமதிக்கின்றோம்.

- புளியரை செக்போஸ்ட் மற்றும் களியக்காவிளை செக்போஸ்ட் அருகில் தினமும் இருநூறு லாரிகள் மண் மற்றும் கற்களை ஏற்றிக் கொண்டு கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

- சில வருடங்களுக்கு முன்பு நாம் அனைவரும் கொரோனா எனும் நோய் பரவலின் காரணமாக முடங்கிய போது மக்களுக்கு தேவையாக இருந்தது உணவு பொருட்கள் மட்டுமே. உணவு பொருட்களின் முக்கியத்துவத்தை கொரோனா நமக்கு எடுத்துரைத்தது.

- கயத்தார் பகுதியிலிருந்து மேற்கு தொடர்ச்சி வழியாக தூத்துக்குடி வரை முன்னோரு காலத்தில் புஞ்சை நிலங்களாக இருந்த நிலங்கள் எல்லாம் தற்போது காற்றாலைகளால் நிரம்பியுள்ளது. அவைகள் அனைத்தும் விவசாய நிலங்கள் ஆகும். அந்த நிலங்களையெல்லாம் காற்றாலை உரிமையாளர்கள் கையகப்படுத்தியுள்ளார்கள்.

- இக்குவாரி அமையவிருக்கும் புல எண் 272-ல் பகுதியில் ஒரு வண்டி பாதை உள்ளது. அதனை EIA report-ல் தெரிவிக்கப்படவில்லை. வண்டி பாதை செல்லும் இடத்திற்கு அருகில் குவாரிகள் அமைந்தால் அங்கு வசிக்கும் மக்கள் அதனை பயன்படுத்த முடியாமல் போகும் நிலை ஏற்படும். அதுமட்டுமின்றி வண்டி பாதை இருக்கும் பட்சத்தில் சுரங்கம் அமைக்க எப்படி அனுமதி வழங்க இயலும்.

- மேலும், குவாரி உரிமையாளர்கள் தற்போது ஒரு புதிய வழிமுறைகளை கையாளுகின்றனர், அதாவது ஒரே நபருக்கு பல சுரங்கங்கள் வழங்க முடியாது என்பதால் இந்த சுரங்கத்தின் உரிமையாளர் பெயர் திரு. கந்தசாமி

ஆகும். ஆனால் ஏற்கனவே அங்கு மூன்று சுரங்கங்கள் இயங்கிவருகிறது. ஒரு சுரங்க உரிமையாளர் பெயர் திருமதி. கஸ்தூரி, க/பெ. திரு.கந்தசாமி, அடுத்து திரு. முருகன், த/பெ. திரு.கந்தசாமி, இப்போது அமையவிருக்கும் குவாரியின் உரிமையாளர் பெயர் திரு. கந்தசாமி. ஆக இந்த மூன்று குவாரிகளும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள். அவர்கள் பல்வேறு பெயர்களில் மாற்றி மாற்றி அந்த பகுதிகளை சுற்றி வளைத்து அங்கு சுரங்கங்கள் ஏற்படுத்தி கொள்கிறார்கள். ஆகையால் இந்த குவாரி அனுமதியை ரத்து செய்ய வேண்டும்.

❖ புல எண் 272 ஆனால் புல எண் 264 இக்குவாரியின் பின்புறம் அமைந்துள்ளது. இக்குவாரின் பின்புறம் குளம் உள்ளது. ஆனால் இவர்கள் தங்கள் EIA report-ல் அதனை பற்றி தெரிவிக்கப்படவில்லை. அதுமட்டுமின்றி அக்குளத்திற்கு தண்ணீர் வரக்கூடிய ஓடை, மறுகால் ஓடை இவை அனைத்தும் அப்பகுதியில் உள்ளது, இவை அனைத்துமே அப்பகுதியில் ஏற்கனவே இயங்கி கொண்டிருக்கும் சுரங்கங்களால் அழிக்கப்பட்டு வருகிறது.

❖ குளங்கள் ஏதும் இனிவரும் காலங்களில் யாரும் உருவாக்கபோதில்லை. ஆகவே இருக்கின்ற குளங்களையாவது நாம் பாதுகாத்திட வேண்டும்.

❖ இவர்கள் ஒரு பொய்யான EIA report-ல் கொண்டு எப்படியாவது சுற்றுச்சூழல் அனுமதி பெற முயற்சிக்கிறார்கள்.

❖ இவர்கள் அமைக்கக்கூடிய குவாரிக்கு அருகில் 10 கிலோ மீட்டருக்குள் ஒரு Sub station உள்ளது. அதனையும் இவர்கள் EIA report-ல் மறைத்துள்ளார்கள்.

❖ மேலும், இவர்கள் கல் மற்றும் மண் எடுத்துச் செல்ல 5 டன் மற்றும் 10 டன் லாரிகளை பயன்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள், ஆனால் தற்போது எந்த குவாரிகளிலும் அந்த லாரிகளை பயன்படுத்துவதில்லை, தற்போது பெரிய டாரஸ் லாரிகளை மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இது வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு கூட தெரியும்.

❖ மேலும் அப்பகுதியில் இக்குவாரியுடன், ஏற்கனவே உள்ள குவாரிகளுடன் சேர்த்து மொத்தம் நான்கு குவாரிகள் இருக்கின்றபட்சத்தில் தினமும் 200-க்கும் மேற்பட்ட பெரிய டாரஸ் லாரிகள் பயன்படுத்தக்கூடும், அவ்வாறு செய்தால் அந்த கிராமத்தின் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்படும்.

❖ விவசாய நிலங்கள் பாதிக்கப்படும். அந்த கிராம சூழல் நரக சூழலாக மாறிவிடும்.

❖ இவர்கள் தண்ணீருக்கு கீழ் மட்டத்தில் நாங்கள் சுரங்கங்கள் தோண்டுவதில்லை என்று கூறுகிறார்கள், ஆனால் அதனை யாரும் ஆய்வு செய்வதில்லை. இதனால் நீர் ஆதாரங்கள் அந்த பகுதியில் பாதிக்கப்படும்.

❖ மேலும் அப்பகுதியில் காற்றாலைகள் இல்லை, நீர்நிலைகள் இல்லை என்று கிராம நிர்வாக அதிகாரிகள் ஒப்புதல் வழங்கவேண்டும் என்று உள்ளது. ஆனால் கிராம நிர்வாக அதிகாரிகள் அதனை ஆய்வு செய்யாமல் சான்று வழங்குகிறார்கள் இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஏனெனில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் ஆய்வு செய்யாததே காரணம் ஆகும்.

❖ இக்குவாரி அமைவதே ஐந்து வருடங்கள் மட்டுமே அனுமதி வழங்கப்படும் ஆகையால் இக்குவாரியினால் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காது.

❖ இது போன்ற சுரங்கங்கள் இயங்கும் போது அதில் மைபின்ஸ் மேட், போர்மேன் போன்ற பணியாளர்கள் முறையாக படித்தவர்களை பணியில் அமர்த்துவதில்லை.

- ஆகவே, ஏற்கனவே இந்த பகுதியில் மூன்று குவாரிகள் அனுமதிக்கப்பட்டுவிட்டது, இது நான்காவது சுரங்கம்.
- இந்த சுரங்கத்தையும் நீங்கள் அனுமதித்தால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்படும். எனவே இந்த சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக்கூடாது. இவர்கள் பல உண்மைகளை மறைத்து சுற்றுச்சூழல் அனுமதியை பெற முயற்சிக்கிறார்கள்.
- ஆகவே, இந்த முகவர்களால் தயார் செய்யப்பட்ட EIA report-ஐ ரத்து செய்ய வேண்டும் என கூறி விடை பெறுகிறேன்.

**2. திரு. எஸ்.வி.சங்கர், திருநெல்வேலி.**

- திரு.கந்தசாமி, புல எண் 272, EIA report-ல் இவர்கள் பெரும்பாலானவைகளை மறைத்துள்ளார்கள்.
- இக்குவாரி அமையவிருக்கும் இடத்திற்கு அருகே காற்றாலைகள் உள்ளன, பெட்ரோல் பங்க்குகள் உள்ளன, குளங்கள், மதகுகள், மறுகால் குளங்கள் உள்ளன.
- குவாரியில் மிக அருகிலேயே வாய்க்கால்கள் உள்ளன. குவாரியின் அருகில் கட்டிடங்கள் உள்ளன. விலங்குகள் குவாரியினால் பாதிக்கப்படும்.
- இக்குவாரியில் பயன்படுத்தப்படும் வெடி பொருட்களால் அப்பகுதி மக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும். ஆகையால் EIA report-ஐ ரத்து செய்ய வேண்டும்.
- மேலும் இந்த கருத்து கேட்புக் கூட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் என கூறி விடை பெறுகிறேன்.

**3.திரு. தங்கப்பாண்டியன், செட்டிக்குறிச்சி.**

- எங்கள் ஊரில் ஏற்கனவே மூன்று குவாரிகள் உள்ளன. அதனை ரத்து செய்திட நாங்கள் பல போராட்டங்கள் செய்துள்ளோம். ஆனால் குவாரி உரிமையாளர்கள் அதிகாரிகளிடம் எந்த வழியிலாவது ஒப்புதல் பெற்றுவிடுகின்றனர். கல்குவாரிகளால் தூசி மாசு ஏற்படுகிறது. ஆதனால் அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்படுகிறது.
- இந்த குவாரிக்கும் அனுமதி வழங்கினால் எங்களது ரேசன் கார்டு மற்றும் ஆதார் அட்டையினை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு எங்களுக்கு வேறு ஊரை பார்த்து கொடுத்துவிடுங்கள், செட்டிகுறிச்சியில் நாங்கள் இருக்க மாட்டோம்.
- மக்களுக்கு நல்லது செய்யவே அதிகாரிகள் அரசு அலுவலகங்கள் உள்ளது.
- ஆகவே தங்கள் மீது நம்பிக்கை வைக்கிறோம், தங்கள் பாதம் தொட்டு ஊர்மக்கள் சார்பாக கூறுகிறோம், இந்த குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என நாங்கள் கூறுகிறோம்.

**4. திரு. பாண்டி, வடக்கு இலந்தைகுளம், நாம் தமிழர் கட்சி, வழக்கறிஞர்.**

- இக்குவாரியின் உரிமையாளர் தெரியாது. முன்விரோதம் ஏதுமில்லை, ஆனால் குவாரி வரக்கூடாது என்பது தெரிவிக்கிறோம். அந்த கருத்தை நாங்கள் முன்வைக்கிறோம்.
- ஒரு குவாரி தொடங்குவதற்கு கிராம நிர்வாக அதிகாரிகள், வட்டாட்சியர் அனுமதி வாங்கி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு பெற்று மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அறிக்கை வாங்கி அதன் அடிப்படையில் அந்த குவாரிகள் செயல்பட வேண்டும் என்பது விதிமுறை.

- ஆனால் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இக்குவாரியை சில நிபந்தனைகளுடன் செயல்படுத்த உத்தரவிட்டார். அவர் உத்தரவிட்ட தேதி 14.07.2023 ஆகும்.
- ஆனால் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு தமிழ் திட்ட சுருக்கத்தில் பக்கம் 52-ல் 2022 செப்டம்பர் மாதம் 01 தேதி முதல் 28. பிப்ரவரி 2023 வரை நாங்கள் அடிப்படையாக கண்காணிப்பு ஆய்வு மேற்கொண்டதாக கூறுகிறார்கள். அதில் சந்தேகம் என்னெவென்றால் மாவட்ட ஆட்சியர் அனுமதி கொடுக்கும் முன்பே இவர்கள் எப்படி 2022-லேயே கள ஆய்வு செய்தார்கள்? இது முழுமையும் பொய்யான தகவலாக உள்ளது. மாவட்ட ஆட்சியர் அனுமதி கொடுக்கும் முன்பே ஏன் EIA report-ஐ தயார் செய்ய வேண்டிய அவசியம் ஏற்ப்பட்டது. இது தவறான EIA report என்பது உதாரணமாக அமைகிறது.
- மேலும் எங்கு நாம் விண்ணப்பித்தாலும் அதில் கையெப்பமிட வேண்டும் அதுவே ஏற்புடையதாக அமையும். ஆனால் இந்த EIA report-ஐ திரு. கந்தசாமி அவர்கள் மாவட்ட சுற்றுச்சூழல் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். ஆனால் அந்த விண்ணபத்தில் திரு. கந்தசாமி அவர்களது கையொப்பமே இல்லை. அவரது கையொப்பமில்லாமல் எப்படி மாசு கட்டுபாடு வாரியம் ஏற்றுக்கொண்டது.
- இந்த தகவல்கள் அனைத்தும் மாசு கட்டுபாடு வாரியத்தின் இணையதளத்திலிருந்து தான் எடுத்துள்ளேன்.
- இக்குவாரி உரிமையாளர் கையொப்பமிடப்படாத EIA report-ஐ வைத்து கொண்டு இந்த கருத்து கேட்புக்கூட்டம் நடத்தப்பட வேண்டிய அவசியமென்ன? அவரது கையொப்பம் இருந்தால் தானே மனுவையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- அடுத்த பக்கம் திட்ட ஆதரவாளர் அதிலும் அவரது கையொப்பமில்லை.
- எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் எதிர்ப்பு வந்திருக்கிறோம், ஆதரவிற்கும் வந்துள்ளார்கள் ஆனால் காவலர்கள் ஏன் வரவில்லை. காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவேண்டுமா? இல்லையா? நான் ஒருவேளை பேசிவிட்டு செல்லும் போது எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் யார் பொறுப்பேற்பீர்கள்?.
- காவல் நிலையத்தில் கேட்ட போது எங்களுக்கு தகவல் இல்லை என தெரிவிக்கிறார்கள். இப்படியொரு நிலைப்பாட்டில் இந்த கருத்து கேட்புக்கூட்டம் அவசியமா?.
- இங்கு அதிக நபர்கள் பேசுவதற்கு துணிவாக இருந்தாலும் பேசிவிட்டு செல்லும் போது ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளார்கள். நேற்று இரவு கிராம நிர்வாக அதிகாரியிடம் இக்கூட்டம் பற்றி கேட்டதற்கு அவர்களுக்கு இக்கூட்டம் பற்றி தெரியாது என கூறுகிறார்கள். ஆகவே காவல் துறைக்கு மற்றும் கிராம நிர்வாக அதிகாரியிடம் தெரிவிக்கப்படவில்லை பின் எதன் அடிப்படையில் இக்கூட்டம் நடைபெறுகிறது என்பது தெரியவில்லை.
- 272/2A, 2B, 2C, 2D, இவர்களது குவாரி அமையவுள்ளது ஆனால் அதன் அருகில் புல எண் 273 உள்ளது, இதற்கு இடையில் தான் பாதை அமைந்துள்ளது. ஆகவே பாதை உள்ள இடத்தில் குவாரிகள் எப்படி அமைக்க முடியும். பாதைக்கு அருகில் குவாரி செயல்பட விதிமுறைகள் உள்ளதா? இதனை மாசு கட்டுப்பாடு வாரியம் ஏற்று கொள்கிறதா? மக்கள் அந்த பாதையை எவ்வாறு பயன்படுத்த முடியும்.
- ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகளால் மரங்கள் ஏதும் நடப்படவில்லை ஆகையால் சுற்றி தூசு மாசு ஏற்படுகிறது. ஏற்கனவே 100 ஏக்கருக்கு மேலாக விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளது.

- ❖ இது குறித்து அனைத்து செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களிலும் தகவல்கள் வந்தது விவசாயிகள் போராட்டங்கள் செய்தனர்.
- ❖ ஏனென்றால் விவசாய நிலங்களில் உள்ள பயிர்கள் வெள்ளை நிறங்களாக மாறிவிட்டது. அங்குள்ள விவசாய நிலங்களில் எந்தவொரு செடிகளும் தளிர்க்கவில்லை பட்டுவிட்டது.
- ❖ செட்டிகுறிச்சி கிராமத்தில் 01.07.2024 அன்று அருகிலுள்ள இரண்டு குவாரிகளுக்கு கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெற்றது அதற்கு அருகில் உள்ள கிராமமக்கள் மற்றும் கடை வியாபாரிகள் அனைவரும் சேர்ந்து குவாரி வருவதை எதிர்த்து கருப்பு கொடி கட்டினார்கள். அதை மீறியும் இவர்கள் புதிதாக அனுமதி வாங்கவுள்ளார்கள்.
- ❖ 272/2A, 2B, 2C, 2D, இவர்களது குவாரி அமையவுள்ளது ஆனால் அதன் அருகில் புல எண் 271/1,2,3 உள்ளது. மேற்படி புல எண் 271/1,2,3 அரசு நிலமாக உள்ளது. இவர்களது நோக்கம் இந்த குவாரி செயல்படுத்தினால் அருகில் உள்ள புல எண் 271/1,2,3 அரசு நிலங்களையும் கையகப்படுத்திவிடலாம் என்பதே.
- ❖ இவ்வாறு அரசு நிலத்திற்கு அருகில் குவாரி அமைந்தால் அரசு நிலம் வீணாகும்.
- ❖ மேலும், இக்குவாரி அமையவுள்ள இடத்திற்கு அடுத்து மற்றொரு குவாரி உள்ளது. மறுபுறம் குளம் மறுபுறம் ஏரி உள்ளது. அவர்களது EIA report -ல் வடக்கு பகுதியில் ஒரு சிறிய ஏரி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது சிறிய ஏரி என்பதால் அதனை அழித்துவிடலாமா?
- ❖ ஆகையால் இக்கருத்துக் கேட்புக்கூட்டத்தை மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதிக்க கூடாது என்றும் EIA report -ல் கையொப்பம் இல்லாததால் இதனை ரத்து செய்து மீண்டும் உரிய முறையில் விண்ணப்பத்து மீண்டும் பொது மக்கள் அனைவரிடமும் தெரிவித்து கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி சார்பாக எங்களது கருத்தினை தெரிவிக்கிறோம்.

**5.திரு. ரங்கராஜன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ் கட்சி, வக்கீல் பிரிவு மாவட்ட செயலாளர்:**

- ❖ இக்குவாரி அமையும் இடத்திற்கு அருகில் எனது மனைவி, அவரது பாட்டி, தாய் மாமன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. அதன் புல எண் 276/1, 279/3B.
- ❖ எனது பாட்டி திருமதி. ஜானகி என்பவர் 30 வருடங்களாக பஞ்சாயத்து தலைவராக இருந்தார். அவர்களுக்கு 86 வயது ஆகிறது. சீனியர் சிட்டிசன் ஆவார். அவர்கள் இது போன்ற குவாரிகள் வருவதை தடுக்க கோவில்பட்டி கோட்டாட்சியரிடம் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நான்கு முறை மனு கொடுத்து போராடியுள்ளார். ஆனால் அதிகாரிகள் பதில் ஏதும் இதுவரை கூறவில்லை.
- ❖ ஏனென்றால் திருமதி. கஸ்தூரி அவர்களது குவாரிக்கு சரியான பாதைகள் இல்லை. பாதையே இல்லாத குவாரிக்கு தாங்கள் எப்படி அனுமதி கொடுக்க முடியும்? அவரது மகன் திரு. முருகன் அவரது குவாரிக்கும் பாதை கிடையாது இருப்பினும் அனுமதி வழங்கப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக 50 முதல் 100 வரையிலான லாரிகள் கல் மற்றும் மணல் ஏற்றி செல்கின்றனர்.
- ❖ இது தொடர்பாக திருமதி.ஜானகி என்பவர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கனிம வளத்துறை அவர்களுக்கும் புகார் அளித்துள்ளார்.

- ❖ அதிகாரிகள் அனைவரும் உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடிதம் மட்டுமே அனுப்பியுள்ளார்கள்.

- ❖ கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி. மகாலெட்சுமி அவர்களும் கடிதம் அனுப்பியுள்ளீர்கள், தேதிவாரியாக தாங்கள் எங்களுக்கு அனுப்பிய நினைவூட்டல் கடிதம் என்னிடம் உள்ளது.

- ❖ ஆனால் ஒருமுறையாவது தாங்கள் நேரில் வந்து குவாரி உரிமையாளர்கள் சேதப்படுத்திய சாலையை பார்வையிடவில்லை. ஆகவே தாங்களும் குவாரி உரிமையாளர்களுக்கு ஆதரவாக தான் செயல்படுகிறீர்கள்.

- ❖ அவ்வாறு அவர்கள் எடுத்து செல்லப்பட்ட லாரிகளால் சேதமடைந்த சாலையை சீர்ரமைக்க நீங்கள் எவ்வித நடவடிக்கையும் செய்யவில்லை, தற்போது இந்த கருத்து கேட்பு கூட்டம் தேவையா?.

- ❖ மேலும் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ளது. மோட்டர் மூலம் தண்ணீர் எடுத்தால் முன்பு 1 மணி நேரம் செலவானது தற்போது 3 முதல் 4 மணி நேரம் மோட்டார் போட்டாலும் தண்ணீர் வரவில்லை, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

- ❖ இது தொடர்பாக நாங்கள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நாங்கள் மனு தாக்கல் செய்துள்ளோம். W.P. No. 13960/2023. அதில் 20.07.2023 அன்று கயத்தாறு வட்டாட்சியர் அவர்கள் நீர்வழிபாதையை இனி அவர்கள் பயன்படுத்தமாட்டார்கள் அவர்கள் பயன்படுத்தியது தவறு தான் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள், ஆனால் அதன் பின்பும் இக்குவாரி உரிமையாளர் அதே பாதையை 8 மாதங்களாக பயன்படுத்திவருகிறார்.

- ❖ தற்போது 29.08.2024 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் கயத்தார் வட்டாட்சியர் அவர்களும் இக்குவாரி உரிமையாளரிடம் இனி அந்த பாதையை பயன்படுத்தமாட்டேன் என்றும் வாக்குமூலம் பெற்றுள்ளாாகள்.

- ❖ அவ்வாறு பாதையை பயன்படுத்தினால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மீதும், கயத்தார் வட்டாட்சியர் அவர்கள் மீதும் தொடுக்கலாம் என்று நீதிமன்றம் உத்தரவு பிரப்பித்துள்ளது. தற்போது இந்த மூன்று குவாரிக்கும் அவர்கள் எந்த பாதையை பயன்படுத்துவார்கள் என்று விளக்க முடியுமா? முறையான ஒப்புதலுடன் எந்த பாதையை பயன்படுத்தப்போகிறார்கள் என்று விளக்க முடியுமா?

- ❖ அவ்வாறு உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு தான் நடவடிக்கை எடுப்பபேன் என்றால் மக்களின் அதிகாரியாக நீங்கள் எதற்கு அரசு அதிகாரிகள் எதற்கு, ஒரு மூத்த குடிமகன் கூறியும் நடவடிக்கை எடுக்காதவர்கள் தற்போது நடவடிக்கை எடுக்கப்போகிறீர்களா?

- ❖ திரு. கந்தசாமி அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் நான் தற்போது புல எண்கள் கூறுகிறேன், அதன் வழியாக தான் பாதை செல்கிறது என்றால் எவ்வாறு தங்களால் அனுமதி கொடுக்க இயலும். நீர்வழி பாதையாக செல்லும் புல எண். 185/2B 185/2B 185/5A 185/5A2 185 6A2 மற்றும் 276/1 இதில் பாதை அமைந்திருந்தால் தங்களால் எவ்வாறு அனுமதி வழங்க இயலும். இப்பாதையானது விவசாய நிலங்கள் வழியாக மழை காலங்களில் நீர் செல்லக்கூடிய பாதையாகும்.

- <u>கயத்தார் வட்டாட்சியர்</u>:

  1. நான் இந்த வட்டத்தில் பதிவி ஏற்று 20 தினங்களே ஆகின்றது.

2. மேற்படி குவாரிகளின் மீது மாண்புமிகு உயர் நீதிமன்ற வழக்கு இருப்பதனால் ஒரு வாரத்திற்கு முன்பாக நான் சென்று ஆய்வு மேற்கொண்டேன்.

3. மேலும், சர்வே பிரிவில் கூறி நிலத்தினை அளந்திட உத்தரவிட்டுள்ளேன். மேலும் அவ்வாறு நீர்வழி பாதையில் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. <u>மீண்டும்: திரு. ரங்கராஜன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, வக்கீல் பிரிவு மாவட்ட செயலாளர்:</u>

❖ 1962 லிருந்து திருமதி. ஜானகி அவர்கள் பெயரில் தான் கிரைய பத்திரம் உள்ளது. பட்டா எண் 758- ம் திருமதி.ஜானகி அம்மையார் பெயரில் தான் உள்ளது அரசாங்கம் பிற்காலத்தில் நீர்வழி பாதைக்காக அந்த நிலங்களை கையகப்படுத்தியது. ஆனால் தற்போது இக்குவாரி உரிமையாளர்கள் அதனை கையப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

❖ ஏற்கனவே அய்வு செய்யப்பட்ட நிலத்தினை மீண்டும் வட்டாட்சியர் அவர்கள் ஆய்வு செய்யவேண்டிய அவசியமில்லை.

❖ வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, கயத்தார் வட்டாட்சியர் அவர்கள் சமுதாயத்தை சார்ந்தவர் என்பதால் அவர்களுக்கு உடந்தையாக செயல்படுகிறார்.

1. <u>மீண்டும் திரு. S.P. முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி.</u>

❖ மேலும் மேற்படி EIA report-ல் கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் மேற்படி குவாரியினால் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாது என அறிக்கை வழங்கியுள்ளார், அவ்வாறு ஒரு கிராம நிர்வாக அதிகாரி எப்படி அறிக்கை வழங்கமுடியும்.

❖ இது போன்ற பொய்யான அறிக்கையை கிராம நிர்வாக அதிகாரி அளித்துள்ளார், அவ்வாறு அறிக்கை வழங்க கிராம நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் உள்ளதா? பாதிப்பு உள்ளதா? இல்லையா என்று பொது மக்கள் தான் தெரிவிக்க வேண்டும்.

❖ எனவே அந்த சுரங்க உரிமையாளரிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு கிராம நிர்வாக அதிகாரி உடந்தையாக இப்படி ஒரு அறிக்கையை கொடுக்கிறார்.

❖ எனவே அந்த கிராம நிர்வாக அதிகாரி மீது உடனடியாக துறை ரீதியான நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துக்கொள்ளகிறேன்.

6. <u>திரு. சேர்மக்கனி, சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி.</u>

❖ EIA report -ல் சுரங்கத்திற்கு ஆதரவாக பல உண்மைகளை மறைத்து கொடுக்கப்பட்ட அறிக்கையாகும்.
❖ ஆகையால் அந்த அறிக்கையை தயார் செய்தவர்களையும் நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.
❖ இதனை மாசு கட்டுப்பாடு வாரியம் கண்டிக்க வேண்டும். மேலும் மாசு கட்டுப்பாடு வாரியமே தற்போது மாசடைந்துள்ளது.
❖ ஒரு காவல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? இந்த இடத்தில் எங்களுக்கு ஏதேனும் பாதிப்பு நேர்ந்தால் யார் பொறுப்பேற்பது கூறுங்கள், ஆகையால் தற்போதே இந்த கருத்துக் கேட்புக்கூட்டத்தை ரத்து செய்யவேண்டும்.
❖ இதேபோல் தூத்துக்குடி மாவட்டத்தில் திரு. கண்ணன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளராக இருந்த போது ஒரு கருத்து கேட்புக்கூட்டத்தை ரத்து செய்து

உத்தரவிட்டார், அதே போல் தாங்களும் இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

7. திரு. பொன் பாண்டியன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர்.

❖ அனைவருக்கும் வணக்கம். இக்குவாரியினால் செட்சிகுறிச்சி கிராமத்திற்கும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கும் எவ்விதமான பாதிப்பும் இல்லை.

❖ அவ்வாறு குவாரியினால் தூசு மாசு ஏற்படுமாயின் அருகிலுள்ள மலையரசி எனும் குவாரியிலிருந்து ஏதும் தூசு மாசு ஏற்படவில்லையா?

❖ முன்னால் பேசிய நண்பர் எனது உறவினர் தான் ஆனால், அவர் கூறுவது போல் பாதைகளில் பிரச்சனைகள் ஏதுமில்லை, அதுகுறித்து பாதை நில உரிமையாளர்கள் ஏதேனும் புகார் அளித்துள்ளாகளா? எதுவுமில்லை. இக்குவாரியினால் எந்தவெரு பாதிப்புமில்லை.

❖ இங்கு கலந்து கொண்ட மக்களில் அந்த குவாரி அமையவிருக்கும் இடத்திற்கு அருகில் உள்ளவர்கள் யாரும் இதில் கலந்து கொள்ளவில்லை எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

❖ இவர்கள் எதிர்ப்பது போல் செட்டிகுறிச்சி பகுதியில் அமைந்துள்ள மூன்று குவாரிகளால் எவ்வித பாதிப்பும் இதுவரை இல்லை.

❖ அந்த மூன்று குவாரிகளுக்கும் கிராம நிர்வாக அதிகாரி, வட்டாட்சியர், கனிமவளத் துறை அதிகாரிகள் ஆகியோர் நேரில் வந்து கள ஆய்வு செய்து பின்னரே உரிமம் வழங்கப்பட்டது.

❖ தற்போது பணியில் சேர்ந்திருக்கும் வட்டாட்சியர் மூன்று முறை கள ஆய்வு செய்துள்ளார்.

❖ அப்படி பார்த்தால், குவாரிக்கு மிக அருகாமையில் எனது வீடு தான் உள்ளது ஆகையால் இக்குவாரியினால் எவ்வித பாதிப்பும் இல்லை என்று நான் எங்கு வேண்டுமானாலும் சொல்வேன்.

8. திரு. பரதன் சிதம்பரம்பட்டி.

❖ இக்கூட்டதில் இக்குவாரிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் இக்கூட்டத்தில் இல்லை என தெரிவித்தார், ஆனால் இக்குவாரிக்கு மிக அருகாமையில் தான் எனது நிலம் உள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. திரு.சுப்பையா, செட்டிக்குறிச்சி.

❖ ஐந்து வருடமாக தூசி பட்டு வம்பாக போய்விட்டது.

❖ விவசாயம் பாதிப்படைந்துவிட்டது.

❖ தாங்கள் தான் எங்களை இந்த தூசி மாசுவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

10. வருவாய் கோட்டாட்சியர், கோவில்பட்டி அவர்களின் நிறைவுரை:

யாரேனும் மனுக்களாக கொடுக்க விரும்பினால் மனுக்களை கொடுக்கலாம்.

1. இது என்னுடைய முதல் கருத்துக்கேட்புக் கூட்டம் ஆகும்.
2. இங்கு பங்கேற்ற அனைவரது கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. இங்கு பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவியாகவும் எழுத்து பூர்வமாகவும மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

4. இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தை ரத்து செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை. இங்கு பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவியாகவும் எழுத்து பூர்வமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படுவது என்னுடைய கடமையாகும். அதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை.

5. எங்கேயாவது விதிமீறல்கள் நடந்தால் தாங்கள் வருவாய் கோட்டாட்சியருக்கு புகைப்படத்துடன் புகார் தெரிவிக்கலாம், கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனது அரசாங்க தொடர்பு எண். 9445000481, இந்த எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

6. எந்த குவாரிகளுக்கும் ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

7. நமது தற்போது தலைமை ஏற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மக்களின் நலனுக்காகவே பணிகள் மேற்கொள்கிறார். எங்களையும் பணி செய்ய கூறுகிறார். ஆகையால் எங்களது அறிக்கைகள் மிகவும் நேர்மையானதாகவும் வெளிப்படை தன்மை கொண்டதாகவும் இருக்கும் என்பது தெரிவித்துக்கொள்கிறேன்.

8. ஆகவே ஒரு தரப்பினர்க்கு மட்டுமே ஆதரவாக செயல்பட வேண்டிய அவசியம் அரசு அதிகாரிகளுக்கு இல்லை, குறிப்பாக வருவாய் அதிகாரிகளுக்கு இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

9. மேலும் இது போன்ற கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு அதனை சுற்றியுள்ள அனைத்து பொது மக்களுக்கும் அறிவித்து கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெறும் என்பது தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பு தருவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1. **திரு. S.P. முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி.**

- ❖ இக்கருத்து கேட்புக்கூட்டத்திற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் தங்களது பேனர்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கருத்துக்கேட்பு கூட்டம் என்று விளம்பரம் செய்துள்ளார்கள், ஆனால் இக்கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை.

- ❖ ஆகையால் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்படும் கருத்துக் கேட்புக்கூட்டம் என்று பதிவு செய்யப்பட வேண்டும்.

- ❖ தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இக்கூட்டத்தின் அறிக்கைளை தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கும் கடமை மட்டுமே உள்ளது, முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## II. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் நிறைவுரை

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் உள்ள படியே பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் வாயிலாக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**III.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து எழுத்து பூர்வமாக எட்டு மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>பொது மக்கள் கருத்துகேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறும்பதிவி (எண்ணம்-2) இணைப்புI-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை எதிர்ப்பு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

05/11/2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

5/11/24

வருவாய் கோட்டாட்சியர்,
கோவில்பட்டி.
(4/6)